# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,486 — 1965 අගෝස්තු 20 වැනි සිකුරාදා — 1965.8.20**

14,486 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவப்படுதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 267 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 268 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. | 273 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. | 275 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 276 |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குப்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்ட/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டால் ஒழிய 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சைகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

---

### முக்கிய விளம்பரம்

*1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 9 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

பேர்னுட் த சில்வா,
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1965 ம் ஆவணி (ஒகத்து) மீ 20 ந் உ.*

---

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர்; ஆனல் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுவதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிருர் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாரானல் குறித்த பதவி நீக்கம் பினபோடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாராளுல், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—" புது உத்தியோகத்தர் " என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உப பந்திகள் 2 (ii) (B), 2 (i) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டியதகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். " இலங்கையர் " என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தேயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **பிற விதிகள்.**—(i) அரசாங்க சேவையிலுள்ள தகைமையுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அன்னவரின் திணைக்களத்தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக, முடிவுத் திகதியிலன்றோ அதன் முன்னரோ அதனைப் பெறக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்கள் அனுப்பும்போது குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவு செய்யப்பட்டால்) விடுவிக்கப்படுவார்களா அன்று என்பதை கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்கின் பிரகாரம் குறிப்பிடல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவுதேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### வெற்றிடங்கள்

**உதவிக் கணக்காளர்கள்**

**கல்வித் தகைமைகள்.**—விண்ணப்பதாரர், பட்டயம் பெற்ற கணக்காளர் ஸ்தாபனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் இண்டர்மீடியட் பரீட்சை சித்தியெய்தியிருக்க வேண்டும்.

அல்லது

தொழில்நுட்ப கல்லூரியின் கணக்கியல் இறுதித் தகுதித்தேர்வுப் பத்திர பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் அல்லது வர்த்தகநிலையத்தில, கணக்கீட்டு வேலையில் 6 வருடத் தொழில் அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

**வயது.**—25—35 வயதிற்குட்பட்டோராக இருக்க வேண்டும்.

**சம்பள விகிதம்** ரூபா 4,800—ரூபா 12,000 / 15 × 480 வருடமொன்றுக்கு அடிப்படை

அரசாங்க திணைக்களங்கள்/அரசாங்க உதவிபெறும் திணைக்களங்கள்/அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிலிருந்து விண்ணப்பங்கள் அனுப்பும் ஊழியர்கள் அவ்விண்ணப்பங்களை தமது கந்தோர் தலைவர் மூலமாக அனுப்ப வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் தகுதி நிர்ணய/பரீட்சார்த்தகாலம் மூன்று வருடங்களாகும். அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைக் குறிப்பாக 1956 ம் வருடத்திய, 33 ம் இலக்க உத்தியோக மொழிச் சட்ட நியதிகளை அமுலாக்கும் நோக்கமாக ஏற்கனவேயும், இதற்கப்புறமும் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பிரஸ்தாப விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், கொழும்பில் அல்லது வாழைச்சேனையில் தங்கியிருந்து வேலை செய்ய வேண்டும்.

மேற்கூறப்பட்ட சம்பள விகிதமானது அடிப்படை வருடமொன்றுக்காகும். அலவான்சுகள் கூட்டுத்தாபன விகிதங்களின்படி செலுத்தப்படும். தற்சமயம், மேற்படி விகிதங்கள் அரசாங்கம் வழங்கும் விகிதங்களை ஒத்திருக்கின்றன.

தகுதி வாய்ந்த தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் கல்வித் தகைமைகள், அனுபவம் என்பவற்றிக்கு தக்கதாய், மேற்படி சம்பள விகிதத்தில், தகுந்தபடியில் நியமிக்கப்படலாம்.

விண்ணப்பதாரர்கள் இக்கந்தோரில் கிடைக்கப் பெற்ற பாரங்களில், தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 1965ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்க்காணும் விலாசத்திலுள்ள தலைவருக்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும். தபாலில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தங்கள் விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய ஒரு கடித உறையினை அனுப்பி வைக்கக் கோரப்படுகின்றுர்கள்.

தலைவர்,
கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

70, யோர்க் வீதி,
த. பெ. இல. 1367,
கொழும்பு 1.

8-716—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திறைசேரி இல. 1/23/21/2 (எச்).

### மொழிபெயர்ப்பாளர் சேவையின் II ம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்குப் பரீட்சை, ஒற்றோபர் 1965

மொழிபெயர்ப்பாளர் சேவையின் II ஆம் தரத்துக்கு இருபானாரு மான பரீட்சார்த்திகளைச் சேர்ப்பதற்குப் போட்டிப் பரீட்சையொன்று, திறைசேரிப் பிரதிச் செயலாளர் கட்டுப்பாட்டின்கீழ் 1965 ஒற்றோபர் 16 ஆந் தேதி தொடங்கி பரீட்சைக் கொமிசனரினல் கொழும்பில் நடாத்தப்படும்.

முழு விவரங்களுக்கு இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமுள்ள அறிவித்தலைப் பார்க்க.

ச. எ. குரே,
திறைசேரிப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு, 1965 ஓகத்து 14.

8-658—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

## பரீட்சைப் பகுதி

### கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை

1965 ம் ஆண்டு ஆகஸ்ட் பரீட்சையிலிருந்து விலகுதற் சீட்டு இனிமேல் வழங்கப்பட மாட்டாது. 1964 ஆகஸ்டிலும் 1964 டிசெம்பரிலும் தற்பொழுதுள்ள விதிகளின்படி விலகிய பரீட்சார்த்திகளுக்கு திருப்பிக் கொடுக்கும் பணத்திற்குப் பதிலாக விலகுதற் சீட்டு வழங்கப்படும்.

1965 ம் ஆண்டு ஆகஸ்ட் பரீட்சையிலிருந்து தற்பொழுது நடைமுறையிலிருக்கும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சைக்குரிய பிரமாணத்தில் 13,14 வது பகுதிகள் கீழ்க்காணும் முறையில் திருத்தப்படுகின்றன.

**பகுதி 13—விலகியதற்காய கட்டணப் பணத்தில் ஒரு பகுதியை திருப்பிக் கொடுத்தல்**

ஒரு பரீட்சார்த்தியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படாமலிருந்து அவரின் கட்டணப் பணத்தை திரும்பப் பெறக் கோரும் பொழுது கீழ்க்காணும் விதிகளுககிணங்க கட்டிய பணத்தின 90 வீதம் திரும்பிப் பெறுதற்கு உரிமையுண்டு.

(i) பரீட்சார்த்தி விண்ணப்பித்த பாடங்களை எடுக்காமல் விலகுதல்.

(ii) டிசெம்பர் மாதப் பரீட்சைக்குரிய விலகுதற் கட்டணப் பணத்தைக் கோரும் அறிவித்தல் அகடோபர் 31 ம் திகதிக்கு முனபும், ஆகஸட் மாதப் பரீட்சைககுரிய விலகுதற் கட்டணத்தைக் கோரும் அறிவித்தல் ஜூன் 30 ம் திகதிக்கு முன்பாகவும் பரீட்சாதிகாரிககுக் கிடைகக வேண்டும். பரீட்சார்த்தி சுகயீனம் காரணமாக இருபபின அவரின அறிவித்தலுடன் வைததிய சானறுப பத்திரமும், பரீட்சாதிகாரிக்கு, பரீட்சை முதல் பாடம் நடககும் தினத்திலிருந்து (7) ஏழு நாட்களுக்குள் கிடைக்கக் கூடிய முறையில அனுபபி வைத்தல வேணடும். பரீட்சாதிகாரி திருபதிப படககூடிய முறையில வைத்திய சான்றுப் பத்திரம் அளிககபபடல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தி எந்த ஒரு பாடத்துக்கும் தோற்றுமல் இருத்தல் வேணடும்.

**பகுதி 14—கட்டிய முழுப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தல்**

ஒரு பரீட்சார்த்தி கீழ்க்காணும் முறையிலிருப்பின் கட்டிய முழுப் பணத்தையும் திரும்பப் பெற உரிமையுண்டு.

(i) முன்னர் நடைபெற்ற ஆகஸ்ட் மாதப் பரீட்சையின் பெறுபேறுகளை எதிர்பார்த்து டிசெம்பர் மாதப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி, முழுப் பரீட்சையிலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ விலக அனுமதிககப்படுவர். உரிய கட்டணப் பணத்தைத் திரும்பப் பெறக் கோரும் உரிமையுண்டு. அவ்வாறு விலகுதலைப் பற்றி அறிவிக்கும் பொழுதும் கட்டணப்பணத்தைத் திருப்பிப் பெறக்கோரும் பொழுதும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் ஆகஸட் மாதப் பரீட்சைச் சுட்டிலக்கத்தையும், தான் விலகக் கோரும் பாடத்தையும் அல்லது பாடங்களையும் குறிப்பிடல் வேண்டும். அத்தகைய பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் பொழுது குறிப்பிட்ட பாடங்களில் எதையாவது மாற்றவோ வேறு பாடத்தைச் சேர்க்கவோ எச்சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கப் படார்.

(ii) முனனர் நடைபெற்ற பரீட்சையொன்றில் செய்த குற்றத்திற்காக பரீட்சைகளுக்குத் தோற்ற முடியாது என்று பரீட்சை அதிகாரியால் தடை விதிக்கப்பட்ட ஒரு பரீட்சார்த்தியின விண்ணப்பமும் பெறுபேறுகள் இருபபின் அவையும், பயனற்றதாகிவிடும். பரீட்சை அதிகாரியின் தீர்மானம் பரீட்சார்த்தி பரீட்சைக்கு விண்ணப்பித்ததற்குப் பின்னர் அன்னருக்கு அறிவிக்கப்பட்டால கட்டணப்பணம் முழுவதும் திருப்பிக கொடுசகப்படும்.

(iii) முன்னர் நடைபெறற கல்விப பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சைப் பெறுபேறுகளில பரீட்சாதிகாரி செய்த மாற்றங் காரணமாக ஒரு பரீட்சார்த்தி விண்ணப்பத்தைத் திருப்பிப் பெறவோ அதில் மாறறஞ் செய்யவோ விரும்பினுல் கட்டணப்பணம் முழுவதுமோ அலலது அதில் ஒரு பகுதியோ திருப்பிக் கொடுககப்படும். பரீட்சார்த்தியின் விண்ணப்பம் இக்கநதோரில் கிடைத்த பின்னர் பரீட்சாதிகாரியின் தீர்மானம் அறிவிககப்பட்டால் தான, இவ்வாறு கட்டணப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எச். எல். விமலசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1965 ம் ஸ்ரீ ஜுலை மீ 30 ந் உ.

8-619—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

## நில அளவைப் பகுதி

**(அ) நில அளவைப் பகுதி நில அளவை மாணுக்கராக/ஒளிவரைய நுண்தொழிலாளராக,**

**(ஆ) புவிப்பாற்று விஞ்ஞான நிறுவகத்தின் மாணுக்கராக, பயிற்சிப் பாடசாலைக்குப் பிரவேசிப்பதற்கான பரீட்சை**

**பரீட்சை நிகழும் திகதி.**—மேற்கூறப்பட்ட பயிற்சிப் பாடசாலைகளில் பயிலுவோராக பிரவேசிகக விரும்புவோருக்குப் போட்டிப் பரீடசையொனறு சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்னும் மூன்று பாஷை மூலமும் கீழ்வரும் இடங்களில் 1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ம், 6 ம் திகதிகளில் நிகழும் : —

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், குருநாக்கல், காலி.

**குறிப்பு.**—போதிய அளவு பரீட்சார்த்திகள் சேராத எந்தத் தானமும் நீக்கபடும்.

**(அ) நில அளவை மாணுக்கர்/ஒளிவரைய நுண்தொழில் மாணுக்கர்.**

**2.** தகுதி : (i) பரீட்சார்ததிகள் இலஙகையர்களாக இருததல் வேண்டும். அ–து ; பரம்பரையால் அல்லது பதிவால் இலஙகைப் பிரஜையாயிருத்தல்.

(ii) (அ) நில அளவை மாணுக்கர் : பரீட்சார்த்திகள் பரீட்சையின் முதற் தினததன்று 19 வயதுககுடபடாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருததல் வேண்டும். அவர்கள் குறைந்த பட்சம், இலஙகை சிரேஷ்ட தராதரப் பத்திரத்தை கணிதசாஸ்திரத்துடன் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை கல்விப் பொதுத் தராதரப் பததிரப் பரீடசையில் (சாதாரண நிலை) கணித சாஸ்திரம், சிங்களம் அல்லது தமிழ்ப் பாஷை ஆகிய வற்றுடன் வேறு நான்கு பாடங்களில் இரு தருணங்களுக்கு மேற்படாத பரீட்சைகளில் சித்தியடநதிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒளிவரைய நுண்தொழில் மாணுக்கர் : பரீட்சார்த்திகள் பரீட்சையின் முதற தினத்தன்று 17 வயதுக்குட்படாமலும் 20 வயதுக்கு மேற்படாமலும் இருததல் வேண்டும். அவர்கள் குறைந்த பட்சம் சிரேஷ்ட தராதரப் பததிரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தைப் (சாதாரண நிலை) சிங்களம்/தமிழ்ப் பாஷை, எண்கணிதம்/கணிதசாஸ்திரம் ஆகியவையுடன் ஆறுபாடங்களில் இரு தருணங்களுக்கு மேற்படாத பரீட்சைகளில் பெற்றிருததல் வேண்டும்.

அவர்கள் பௌதிகவியல், கணிதசாஸ்திரம், உயர்கணிதம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியடைநதிருதத்ல் வேணடும்.

(ii) (அ) வுக்கும் (ஆ) வுக்கும்

**குறிப்பு.**—சிங்கள மொழியில் கல்விகற்ற ஒரு சிங்களப் பரீட்சார்த்தியின் விடயததில், அப்பரீடசார்ததி சிரேஷ்ட பாடசாலைத் தராதரபபத்திர அலலது அதையொத்த பரீட்சையில் சிங்கள பாஷையில அல்லது அதையொத்த பாடததில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும.

(இந்நிபந்தனை, 1961 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதிக்குமுன் அரசாங்க சேவையில் சேர்ந்து, அரசாங்க சேவையில வேறு பதவிகளுக்கு சேர விரும்பும் உத்தியோகததர்களுக்கு அமையாது).

**3. தகுதிக்குரிய சாசனங்கள்.**—விண்ணப்பத்துடன் கீழ்வரும் மூல சாசனங்களும் அனுப்பப்படவேண்டும்.—

(அ) பொறுப்புள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட்ட ஒரு நற்சான்றுப் பத்திரம்.

**குறிப்பு.**—பரீட்சார்த்தி அரசாங்கப் பாடசாலையில் அல்லது உதவி பெறும் பாடசாலையிற் கல்வி பயின்றவராயின் நற்சான்றுப் பத்திரம் அவர் கடைசியாகக் கல்வி பயின்ற பாடசாலையின் அதிபரால் கைச்சாத்திடப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது ஒரு சமாதான நீதவானுல், வழக்கறிஞரால், நியாய துரந்தரரால் அல்லது நொத்தாரிசால் அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரால், அல்லது வருடம் ஒன்றுக்கு ரூபா 2,400 அல்லது அதற்குமேல் சம்பளம் பெறும் ஒரு அரசாங்க உத்தியோகத்தரால், அல்லது பரீட்சார்த்தியைப் பற்றிய விபரத்தை இலகுவில் தரக்கூடியவரும், பிரபலஸ்தருமான ஒருவரால் கைச்சாத்திடப்படலாம். நற்சான்றுப் பத்திரத்தில் அதைக் கொடுத்தவரது பெயர், தொழில், விலாசம் முதலியன தெளிவாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்பத்திரம்.

குறிப்பு.—(i) பாடசாலைக்கு அல்லது கல்விக்குரிய உபயோகத்திற்காக வழங்கப்படும் விசேடப் பிறப்புப் பத்திரமோ பிறப்புப் பதிவிடாப்பிலிருந்தோ அனுமதிக்கப்பட்ட சுருக்க அத்தாட்சிப் பத்திரமோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) சத்தியக் கடுதாசிகள் அல்லது ஞானஸ்நானப் பத்திரங்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா .

(iii) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கொடுத்ததும் அவர் வழக்கமாக உபயோகிப்பதுமான பெயர் அல்லது அத்தகைய பெயர்கள், பிறப்புப் பத்திரத்தில் உள்ள பெயர் அல்லது பெயர்களோடு மாறுபடுமானல் பிறப்புப் பதிவிடாப்பில் அப்பெயரைத் திருத்தி எழுதுவதற்காக, சந்தர்ப்பத்திற்கேற்ப 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச்சட்டத்தின் 27 ம் அல்லது 28 ம் பிரிவிற் கூறப்பட்டபடி உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவு (திருத்தச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவிற் திருத்திக் கூறப்பட்ட 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 24 (6) ம் பிரிவின்படி பிறந்த திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பிறகு பதியப்பட்ட பிறப்புப் பதிவின் ஒரு அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதி, பிறந்த திகதி சரியென்று உறுதிப்படுத்திய அத்தாட்சிகளை ஆராய்ந்த பின்புதான், நியமனங்கள் செய்வதற்காக ஏற்றுக்கொள்ளபடும்.

(இ) இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யப்பட்டதற்கு ஒரு அத்தாட்சிப் பத்திரம் அலலது பரம்பரைமூலம் பிரஜா உரிமை கோரியதை ஏற்றுக்கொண்ட உத்தியோக பூர்வமான மூலக்கடிதம் (பொருத்தமானவிடத்து).

(ஈ) கல்வித் தராதரப் பத்திரம் அல்லது தராதரப்பத்திரம் வழங்கப்படாதிருக்கும் சமயத்தில், உத்தியோகபூர்வமான பிரசாசனம் உதாரணம்.—(தனிபபட்ட முறையில் மனுப்பண்ணும்) பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சையின் பெறுபேற்றுப் பத்திரம், அல்லது பரீட்சார்த்தி கல்வி கற்ற பாடசாலையின் அதிபரிடமிருந்து பெற்ற மூலக் கடிதம்.

சலுகைகள்.—

4. நிரந்தர உத்தியோகத்தர்கள்—(அ) நில அளவைப் பகுதியில் 1965 ஆகஸ்ட் 14 ல் நிரந்தர பதவியில் உத்தியோகம் வகிப்பவர்கள் கீழ் வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருந்தால், இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் :—

(i) அவர்கள் 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தராதரங்களை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) அவர்கள் 1965 நவம்பர் 1 ல் 45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) அவர்களது சேவை திருப்தியானதாக இருந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு.—1956 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ந் திகதிக்கு முன்பு நியமிக்கப்பட்டு இப்பரீட்சையில் சித்தியடையும் மேற் கூறிய வகையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அரசாங்க பாஷைக் கொள்கை விஷயத்தில் " முன்பு சேர்ந்தவர்களாகக் " கருதப்படுவார்கள்.

(ஆ) அரசாங்கத்தில் 1965 செப்டம்பர் 1 ம் திகதிக்கு நேராக முன்பு 4 வருடம் தொடர்ந்த சேவை செய்த நில அளவப் பகுதி நிரந்தர உத்தியோகத்தர்கள் கீழ் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகட்கு உட்பட்டிருந்தால், இப்பரீட்சையை எடுக்க அனுமதிக்கப்படுவார்கள்.—

(i) அவர்கள் குறைந்தது கேம்பிரிட்ஜ் கனிஷ்ட பரீட்சை அல்லது கல்விப் பகுதியின் கனிஷ்ட பாடசாலைப் பத்திரப பரீட்சை அல்லது கல்விப் பகுதியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையினது கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) அவர்கள் 1965 நவம்பர் 1 ல் 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு 1.—இச்சலுகை ஒளிவரைய நுண்தொழில் மாணுக்கருக்கு அமையாது.

குறிப்பு 2.—1956 ம் செம்டம்பர் மாதம் 24 ந் திகதிக்கு முன்பு நியமிக்கப்பட்டு இப்பரீட்சையில் சித்தியடையும் மேற் கூறப்பட்ட வகையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அரசாங்கப் பாஷை விஷயத்தில் " முன்பு சேர்ந்தவர்களாகக் " கருதப் படுவார்கள்.

(இ) தற்காலிக உத்தியோகத்தர்கள்.—நில அளவைப் பகுதியில் தற்காலிக பதவிகளிலிருப்பவர்கள் பின்வரும் நிபந்தனைகட்கு உட்பட்டிருந்தால் இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.—

(i) அவர்கள் 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தராதரங்களையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) அவர்கள் 1965 நவம்பர் 1 ந் திகதி 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) அவர்கள் 1965 செப்டம்பர் 9 க்கு நேராக முன்பு நில அளவைப் பகுதியில் குறைந்தது ஒரு வருடம் தொடர்ந்து சேவை செய்திருத்தல் வேண்டும். (விண்ணப்பங்கள் ஏற்பதற்கு குறிக்கப்பட்டிருக்கும் கடைசித் திகதிக்கு முன் ஒரு வருடம் தொடர்ந்த சேவை).

(ஈ) அரசாங்கத்தில் 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ந் திகதிக்கு நேராக முன்பு 4 வருடம் தொடர்ந்த சேவை செய்த நில அளவைப் பகுதித் தற்காலிக உத்தியோகத்தர்கள் 4 (ஆ) ம் பந்தி நிபந்தனை (i) ம் ஆம் (ii) ஆம் கூறப்பட்டுள்ள தராதரங்களை உடையவர்களாக இருந்தால் இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

குறிப்பு : இச்சலுகை ஒளிவரைய நுண்தொழில் மாணுக்கருக்கு அமையாது.

இலங்கையில் உள்ள ஐக்கிய இராச்சியச் சேவையால் வேலையிலிருந்து விடப்பட்ட உத்தியோகத்தர்கள்.

(உ) இலங்கையிலுள்ள அந்நிய நாட்டுத் தளங்களை எடுக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் வேலையிலிருந்து 6.7.56 ல் விடப்பட்ட அல்லது 6.7.56 க்குப் பின்பு விடப்பட்ட அல்லது இனிமேல் விடப்படும், இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய ஸ்தாபனங்களினது, இராணுவத்தினரல்லாத இலங்கையாகவுள்ள பொது உத்தியோகத்தர்களும், நாறென்பிட்டியிலுள்ள (ஆண்டெர்சன் நிலையம்) அரச கடற்படைக் கம்பியில்லாத் தந்தி நிலையத்தை திருகோணமலைப் பெரும் பகுதியிலுள்ள பெரிய கரச்சிக்கு மாற்றும் அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம், 27.9.54 ற்குப் பின்பு, வேலையிலிருந்து விடப்பட்ட இந்நிலையத்தினது உத்தியோகத்தர்களும், கீழ்வரும் சலுகைகளைப் பெற அருகதை உடையவர்களாவார்கள் :—

(i) 2 ம் பந்தியில் கூறப்பட்ட வயது எல்லைக்காக வயதைக் கணிப்பதற்கு அவர்கள் ஐக்கிய இராச்சிய சேவைகளில் தாங்கள் செய்த சேவை தொடர்ந்ததாகவும் திருப்தியானதாகவும் இருந்தால் அச்சேவைக் காலங்களை தங்களது வயதிலிருந்து குறைப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(ii) 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ந் திகதி அல்லது அதற்கு முன் இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய சேவைகளில் 4 வருடம் தொடர்ந்தும், திருப்தியாகவும், சேவை செய்தவர்கள், 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தராதரங்களை உடையவர்களாக இல்லாதிருந்தும், 4 (ஆ) (i) ம் பந்தியில் கூறப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்திருக்கும் பட்சத்தில் இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

ஒளிவரைய நுண்தொழில் மாணுக்கர் 2 (i) (ஆ) ம் பந்தியில் குறிப்பிட்ட தராதரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—ஐக்கிய இராச்சியச் சேவைகளில் செய்ய சேவையின் மூல தராதரப் பத்திரங்கள் விண்ணப்பங்களோடு இணைக்கப்படல் வேண்டும்.

சேமப்படையினர்.—(ஊ) சேமப்படையினர்.—முறையான நிரந்தரப் படையில் சேவை செய்த பின்பு சேமப்படைக்கு மாற்றப்பட்ட ஆயுதப் படையினர் பின்வரும் சலுகைகளைப் பெற அருகதையுள்ளவர்கள் :—

(i) 2 ம் பந்தியில் கூறப்பட்ட வயது எல்லைக்காக வயதைக் கணிப்பதற்கு, முறையான படையில் உள்ள சேவைக்காலத்தைக் கழிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(ii) முறையான படையில் 4 வருடத்திற்குக் குறையாமல் சேவை செய்திருந்தவர்கள் 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தராதரம் இல்லாதவர்களாயிருந்தாலும், 4 (ஆ) (i) பந்தியில் கூறப்பட்டிருக்கும் பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்திருந்தால், இப்பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

ஒளிவரைய நுண்தொழில் மாணுக்கர் 2 (ii) (ஆ) ம் பந்தியில் குறிப்பிட்ட தராதரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—ஆயுதப்படைகளில் செய்த சேவையின் மூலதராதரப் பத்திரங்கள் விண்ணப்பங்களோடு இணைக்கப்படல் வேண்டும்.

செலவைச் சுருக்கும் காரணமாய் வேலையிலிருந்து விடப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள்

(எ) வேலையிலிருந்து தள்ளப்படாது, அல்லது அதிபருப்பதியாக வேலை செய்வதின் நிமித்தம் நீக்கப்படாது அல்லது வேலையிலிருந்து தாமே நீங்காது செலவைச் சுருக்கும் காரணமாய் அரசாங்கம் வேலையை முடிவு செய்ததின் நிமித்தம் உத்தியோகத்தை இழந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்கள் சேவைக்காலத்தை/காலங்களை தங்கள் வயதிலிருந்து

கழிப்பதால் 2 ம் பந்தியிலுள்ள மேற் தொகை வயது எல்லைக்குட்படக்கூடுமானால், அப்படிக் கழிக்கும் சலுகைகள் பெறுவார்கள்.

**குறிப்பு.**—செலவைச் சுருக்கும் காரணமாய் வேலையிலிருந்து விடப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் என்பது நிரந்தர அல்லது தற்காலிக பதவியில் உத்தியோகம் வகித்து வேலையில் அல்லது ஒழுக்கத்தில் அதிருப்தியெனக் கண்டு உத்தியோகத்திலிருந்து நீக்கப்படாத எல்லோரையும் குறிக்கும்.

5. **விண்ணப்பங்கள்.**—இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்காக நில அளவையாளர் அதிபதியின் கந்தோர், கிருல வீதி, நாரகன்பிட்டி கொழும்பு 5, என்னும் விலாசத்தில் 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ந் திகதி வரைபெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் மூன்று பாஷைகளிலும் பெறற்பாலன. இப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது பரீட்சார்த்திகள் எப்பாஷை மூலம் பரீட்சையை எழுத விரும்புகிறார்கள் என்பதையும், அவர்களின் வயது, கல்வித் தராதரம் ஆகியவற்றைக் குறிப்பிடல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்ட தபாலில் 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ந் திகதியன்று பிற்பகல் 2 மணி அல்லது அதற்கு முன்பு நில அளவையாளர் அதிபதி, தபால் பெட்டி எண் 506, கொழும்பு 5, என்ற விலாசத்தை அடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ந் திகதி பிற்பகல் 2 மணிக்குப் பின்பு கிடைக்கும் எந்த விண்ணப்பமும் அங்கீகரிக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தில் ரூபா 20 பெறுமதியுள்ள முத்திரை அல்லது முத்திரைகள் ஒட்டப்பட்டுக் கையொப்பமிட்டு அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. நில அளவையாளர் அதிபதி, ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை அவற்றிற்குரிய பரீட்சார்த்திகளிடம் திரும்பி அனுப்புவார். இப் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும்பொழுது, நில அளவையாளர் தலைமை அதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களையும் அவர்களது கையெழுத்துப் பத்திரங்களையும் பரீட்சையை மேற்பார்க்க நியமிக்கப்படும் உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி, பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

**8. (i) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை கண்டிப்பாகப் பிரமாணங்களுக்கமையவே அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தோடு அனுப்பப்பட வேண்டிய சரியான சாசனங்களுடன் அனுப்பப்படாததும் வேறு எந்த விடயத்திலாவது குறைபாடுடையதுமான எந்த விண்ணப்பமும் அங்கீகரிக்கப்படமாட்டாது.**

**(ii) அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் முதலாம் பாகம் 2 ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவை நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளையும் கவனிக்க.**

9. **அடையாளச் சீட்டு.**—எல்லாப் பரீட்சார்த்திகளும் தமது அடையாளத்தைத் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், மேற்பார்வையாளர் திருப்திப்படுமாறு பரீட்சை மண்டபத்தில், நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக கீழ்க் கூறப்படும் ஏதாவதொரு சாசனம் அங்கீகரிக்கப்படும்.—

(அ) தபாற் கந்தோர்கள் தலைமை அதிபதியால் வழங்கப்படும் அடையாளச் சீட்டு.

(ஆ) இப்பரீட்சைத் திகதிக்கு முன் மூன்று வருடத்திற்கு உட்பட்ட காலத்தில் வழங்கப்பட்டதும் செல்லுபடியாகக் கூடியதுமான ஒரு பிரயாண அனுமதிச் சாசனம் (பாஸ்போட்டு).

(இ) இப்பரீட்சை நிகழும் திகதிக்கு முன் மூன்று வருஷத்திற்குள் ஓர் அரசாங்கப் பகுதியின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும், அதற்குரியவரது புகைப்படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு அத்தாட்சிப்பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிறசாசனம்.

**குறிப்பு.**—(i) தபாற் கந்தோர்கள் தலைமை அதிபதியால் வழங்கப்படும் அடையாளச் சீட்டுகளைப் பெறுவதற்குரிய விண்ணப்பப் பத்திரங்களை இலங்கையிலுள்ள எந்தத் தபாற் கந்தோரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) அனுமதிச் சீட்டோடும் கையொப்பப் பத்திரத்தோடும் மேற்கூறப்பட்ட ஏதாவதொரு சாசனத்தைக் கொண்டுவராத எப்பரீட்சாத்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

10. **பொய்யான விபரங்கள் தருவோருக்குரிய அபராதம்.**—

(i) ஒரு பரீட்சார்த்தி இப்பரீட்சையின் பிரமாணங்களின்படி தகுதியற்றவர் என்று காணப்பட்டால், பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடக்கும் போதோ, பரீட்சைக்குப் பின்போ எந்நிலையிலாவது அவரைப் பரீட்சார்த்தியென அனுமதித்தமை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏதுவாகும்.

(ii) பரீட்சார்த்தியால் கொடுக்கப்பட்ட விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்கு உட்படவே பொய்யானவை என்று காணப்பட்டால் அல்லது தேவையான உண்மைகளை மறைக்கும் நோக்கத்துடன் அவர் கொடாது விட்டால் அல்லது அவரது சேவைக் காலத்தில் எந்த நேரத்திலும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராக இருந்தார் என்று நிரூபிக்கப்பட்டால் அவர் உடனே சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(iii) பரீட்சை எடுக்க அனுமதி கொடுத்தமை பரீட்சார்த்தியின் தகுதியை ஒப்புக்கொண்டமையாகாது.

11. பரீட்சார்த்திகள் சிறந்த அங்க அமைப்பும் தெளிவான கண் பார்வையும் உள்ளவராக இருத்தல் வேண்டும். அத்துடன், ஒளிவரைய நுண்தொழில் மாணுக்கர் முழுத் திண்மித்தோற்றமும், இயல்பான நிறத்-தோற்றமும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

12. **பணம் திரும்பிக் கொடுத்தல்.**—எச்சந்தர்ப்பத்திலாவது பரீட்சைக்குக் கட்டணமாகச் செலுத்திப்பணம் திருப்திக்கொடுக்கப்படமாட்டாது.

13. **பரீட்சைக்குரிய பாடங்கள்** — **புள்ளிகள்**

(i) **பாஷையும் வியாசமும்**—
(வியாசம், சுருக்கி எழுதல், பாஷையின் சரியான உபயோகத்தைப் பரீட்சிக்கும் வினாக்கள் ஆகியவற்றைக் கொண்ட 1½ மணி நேரவினாப்பத்திரமாக அமையும்) 150

(ii) **கணிதசாஸ்திரம்.**—(திருகோணமிதி நீக்கப்பட்டு) கூட்டல் பயிற்சியுடன் கூடிய ஒருமணிநேர வினாப்பத்திரம் .. 100

(iii) **திருகோணமிதி.**— அடுக்குமூலம், சாதாரணதிரிகோணமிதி சாஸ்திர கிரியங்களுடன் கூடிய ஒரு மணிநேர வினாப் பத்திரம் .. .. .. 100

(iv) **விவேகப் பரீட்சை.**— 40 நிமிட வினாப்பத்திரம் .. 50

(v) **படம் வரைதல்.**—மூன்றரை மணிநேர வினாப்பத்திரம், பரீட்சார்த்திகள் அளவு கருவிகளின் துணையின்றி கொடுக்கப்படும் தேசப்படமொன்றின் புற உருவத்தைப் பெருப்பித்து மையினால் கீறி, வர்ணம் தீட்டிப் பெயர் குறித்தல் வேண்டும். இத்தேசப் படத்தின் மாதிரி ஒன்றைப் பரீட்சை எடுக்க விரும்புவோர் கீழ்வரும் கந்தோர்களில் சென்று பார்க்கலாம் :—

(அ) நில அளவையாளர் அதிபதியின் கந்தோர், கிருல வீதி, நாரன்பிட்டி, கொழும்பு 5.

(ஆ) மற்றும் காலி, குருநாக்கல், அனுராதபுரம், வதுளை, கண்டி, திரிகோணமலை, தியத்தலாவை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள பெரும்பாக அளவைக் கந்தோர்களிலும் பார்க்கலாம்.

பரீட்சார்த்திகள் கறுப்புப் படம் வரை மை, நீர் நிறப் பூச்சிப் படம் வரைவதற்கு வேண்டிய உபகரணங்கள் ஆகியவற்றைக் கொண்டுவரல் வேண்டும் .. 150

**குறிப்பு.**—(i) முதல் (v) வரையுமுள்ள பாடங்களுக்குரிய வினாப் பத்திரம் சிங்களம், தமிழ் ஆங்கிலம் என்ற மூன்று பாஷைகளிலும் இருக்கும். 2 ம் பந்தியில் கூறியுள்ள இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் குத் தகுதியளிக்கும் பரீட்சையைப் பரீட்சார்த்திகள் எந்த மொழி மூலம் எழுதிச் சித்தியெய்தினார்களோ அந்த மொழியிலேயே குறிப்பிட்ட பாடங்களை எழுதல் வேண்டும்.

(அ) பரீட்சார்த்தி தகுதியளிக்கும் பரீட்சையில் வெவ்வேறு பாடங்களை வெவ்வேறு மொழிமூலத்தில் சித்தியெய்தியிருந்தால், அப்பாடங்களை இப் பரீட்சையிலும் அதே மொழிமூலத்தில் எடுத்தல் வேண்டும்.

(ஆ) தமிழ் அல்லது ஆங்கிலம் மொழிமூலம் சித்தியடைந்த பரீட்சார்த்திகள், விரும்பினால், இப்பாடங்களை சிங்கள மொழிமூலத்தில் எடுக்கலாம்.

14. **தெரிவுச்சபை.**—எழுத்துப் பரீட்சையின் பெறுபேற்றுக்களை ஒட்டி ஒரு குறிக்கப்பட்ட தொகையுள்ள பரீட்சார்த்திகள் கொழும்பில் ஒரு தெரிவுச் சபையின் முன் தோற்றுமாறு கேட்கப்படுவார்கள். தெரிவு சபைக்கு அழைக்கப்படுவோரின் தொகை நில அளவையாளர் அதிபதியால் தீர்மானிக்கப்படும்..

15. கிடைக்கும் வெற்றிடங்களைப் பொறுத்து, சபையால், தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பயிற்சி தொடங்குமுன், தாங்கள் பின்பற்ற விரும்பும் பயிற்சியைத் தெரிவு செய்தல் வேண்டும். அ-து : நில அளவை மாணுக்கர், ஒளிவரைய நுண் தொழில் மாணுக்கர் அல்லது புவிப்பாற்று விஞ்ஞான நிறுவகத்தால் வழங்கப்படும் நில அளவையில் தகுதித் தேர்வுப்பத்திரப் பயிற்சி. அத்தேர்வே முடிவானதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் உரிய கடைமைகளை ஏற்பதற்கான உடல் வலியுற்றிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கு சௌக்கிய சேவை அதிபதியால் வைத்திய பரிசோதனை செய்யப்படுவார்கள். ஒளிவரைய நுண்தொழில் மாணுக்கர் மேலும் முழுத் திண்மித் தோற்றத்திற்கும் இயல்பான நிறத்தோற்றத்திற்கும் பரீட்சிக்கப்படுவர். இப் பரிசோதனைக்கு கட்டணம் ரூபா 5 வசூலிக்கப்படும்.

16. **நில அளவை மாணுக்கர்/ஒளிவரைய நுண்தொழில் மாணுக்கர் பயிற்சிப் பாடசாலைக்குப் பிரவேசிப்பதற்குரிய நிபந்தனைகள்.**—

(i) பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பயிற்சிக் காலத்தில் தனது பராமுகத்தால் அல்லது கவலையீனத்தால் இழந்த அல்லது பழுதாக்கிய சம்பத்துக்களினதும் அல்லது உபகரணங்களினதும் பெறுமதியை அரசாங்கத்திற்குக் கொடுப்பதற்கும், தனது பயிற்சியை பயிற்சிப் பாடசாலையில் முடித்த பின்பு, இரண்டாவது தர நில அளவையாளராக/இரண்டாந்தர ஒளிவரை நுண்தொழிலாளராக மூன்று வருட காலத்திற்கு சேவை செய்வதற்கும், ரூபா 6,000 பெறுமதியான சொத்துள்ள ஒரு அங்கீகரிக்கப்பட்ட பிணையாளியைக் கொண்ட ஒரு உடன்படிக்கையும் ஒப்பந்தமும் செய்துகொள்ளல் வேண்டும்.

சொத்துள்ள பிணையாளிகளை ஏற்படுத்த முடியாதவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் மாதமொன்றுக்கு ரூபா 40 ம், பின்பு மூன்று வருட காலத்திற்கு மாதமொன்றுக்கு ரூபா 80 ம் கட்டப்பட வேண்டிய ஒரு அனுக்க உடன்படிக்கைக்குள் பிரவேசிக்கும் சலுகை அளிக்கப்படும். கட்டப்படும் இப்பணத் தொகைகள் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும். இவ்வாறு கழிககப்படும் தொகைகள் பயிற்சியாளர் செய்யக்கூடிய குறைகளுக்காக பிணைப்பணமாக வைக்கப்பட்டு, ஒப்பந்தத்திலும் உடன்படிக்கையிலும் உள்ள விதிகளும் நிபநதனைகளும் முறையாக அனுசரிக்கப்பட்ட பின்பு அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

(ii) பரீட்சார்த்தி பயிற்சிப் பாடசாலைக்குப் பிரவேசிக்கும் திகதி தொடக்கம் ஒப்பந்தமும் உடன்படிக்கையும் அனுசரணைக்கு வரும்.

(iii) அரசாங்க மொழிக்கொள்கை விடயத்தில் அரசாங்க சேவைக்கு "புதிய பிரவேசகராயின்" :—

தகுதிகாண் நிலைக்காலம் 3 வருடங்களாகும்.

(ஆ) அவர்கள் ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இதற்குப்பின் ஆக்கப்படும் விதிகள் எவற்றிற்கும், குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க பாஷைச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கும் இணங்கி ஒழுகுதல் வேணடும்.

(இ) அவர்கள் தகுதிகாண் நிலைக்காலத்தில் சிங்களத்தில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

(ஈ) அவர்களை நியமனத்தில் உறுதிப்படுத்துவது, பயிற்சியையும் படிப்பையும் திருப்திகரமாக முடிப்பதையும், தகுதிகாண் நிலைக்காலத்தில திருப்தியான சேவையையும், மற்றும் விதிகளுக்கு அமைவதுடன், குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட சிங்கள தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியெய்துவதையும் பொறுத்திருக்கிறது. குறிபபிட்ட கலத்திறகுள் இப் பரீட்சைகளில் சித்தியெய்தத் தவறின் வேதன உயர்வு இடைநிறுத்தப்படும். தொடர்ந்து அடுத்த ஆறு மாதத்திறகுள குறித்த பரீட்சையில் சித்தியெய்தத்தவறின் இவ இடைநிறுத்தம், நிறுத்தமாக, மாற்றப்பட்டு, அந்த நிறுத்தம் பரீட்சையில் சித்தியெய்தும்வரை இயங்கும்.

அவர்கள் நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டு, 2 வருடங்கட்குள், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தரத்தில் சிங்கள மொழியில் ஒரு வினைத்திறமைத் தடைப்பரீட்சையில் சித்தியெத்தல் வேண்டும். இப்பரீட்சையில் சித்தியெய்தத் தவறின் வேதன உயர்வு பின்போடப்படும்.

(உ) தகுதிகாண் நிலைக்கால முடிவில் சிங்களத்தில் குறிப்பிட்ட தராதரத்தில் தேர்ச்சியடையாவிட்டால் நிருவாகப் பிரமாணங்கள் 120, 121 இன் ஏற்பாடுகள் அமையும்.

(தமிழ் மொழி/ஆங்கில மொழி மூலம் நியமனத்திற்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு நிபந்தனைகள் (இ), (உ) ஆகியன அமையும்).

**17. நில அளவை மாணுக்கருக்கு/ஒளிவரைய நுண்தொழில் மாணுக்கருக்கு கொடுக்கப்படும் வேதனம்.**—பரீட்சாத்திகளின் தேர்ச்சி திருப்திகரமாக இருக்கும் சமயத்தில் மாதம் ஒன்றுககு ரூபா 75, ம், அரசாங்க விகிதப்படி சீவனப்படியும், விசேஷ சீவியப்படியும் வேதனமாக அவர்கள பெறுவார்கள்.

**18. நியமனங்கள்.**—(i) நில அளவை மாணுக்கர்/ஒளிவரை நுண் தொழில் மாணுக்கர், இரண்டாந்தர நில அளவையாளராக அல்லது இரண்டாந்தர ஒளிவரைய நுண் தொழிலாளராக கடைமையாற்றுவதற்குத் தகுதியுடையவர்களென அறிவிக்கப்பட்டவுடன், தங்கள் நியமனங்களைப் பெறுவர். இந்நியமனங்கள் 3 வருடத்தகுதிகாண் நிலையிலிருக்கும். இக்காலம் இளைப்பாற்றுச்சம்பளம் பெறுவதற்குச் சேர்க்கப்படும். பயிற்சிக் காலமும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதற்குச் சேர்க்கப்படும். இக் காலத்தில் எந்தத் தருணத்திலாவது அவர்களது வேலை திருப்தியற்றதாகக் காணப்பட்டால அல்லது அவர்கள் நடத்தைப் பிழைக்காக குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர்கள் சேவையிலிருந்து நில அளவையாளர் அதிபதியால் நீக்கப்படுவர். அப்படி நீககப்படும் வேளையில் அவர்கள் தங்களைப்பயிற்றிய செலவுத் தொகையை, அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியவர்களாவார்கள்.

(ii) நியமனங்கள் அரசாங்க சேவை அதிகார சபைச் சட்ட விதிகளுக்கும், நிதி நியதி, பரிபாலன நியதி, பகுதிக் கட்டளைச் சட்டம், மற்றும் அரசாஙகத்தால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் வேறு சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்பட்டுள்ளன.

(iii) அவைகள் காலத்திற்குக் காலம் மாற்றப்படும். அரசாங்க சேவை நிதி, பகுதி முதலியவற்றின் சட்ட ஒழுங்குகளுக்கும், மற்றும் அரசாங்கத்தினது சடட ஒழுங்குகளுக்கும் ஏற்ப வாடகைப்படி, ஓய்வு, விடுமுறை முதலியனவறறைப் பெறுவதற்கு உரிமையாளராவார்கள்.

(iv) பிரயாணச் செலவுகள், நிதிப் பிரமாணங்கள் பகுதிப்பிரமாணங்களுககேற்ப கொடுக்கபபடும்.

(v) இரண்டாந்தர நில அளவையாளராக அல்லது இரண்டாந்தர ஒளிவரைய நுண்தொழிலராக நியமிக்கப்படும்போது அவர்கள், அரசாங்க உத்தயோகத்தர்கள் (பிணை) கட்டளைச்சட்டத்திற்கிணங்க ரூபா 1,000 பிணை கொடுக்கும்படி வேண்டப்படுவர். இப்பிணை மாதம் ரூபா 10 வீதம் அவர்களது சம்பளத்திலிருந்து கழிக்கப்படும்.

**19. சிரேட்டத்துவக் கிரமம்.**—ஒரே நாளில் நியமனம் பெற்ற நில அளவையாளர்களின் அல்லது ஒளியவரைய நுண்தொழிலரின் சிரேட்டத்துவக்கிரமம் பயிற்சிப்பாடசாலையில் ஒவ்வொருவரும் கடைசியாக நடக்கும் தகுதிப் பரீட்சையில் எடுத்த புள்ளிகளின் கூட்டுத்தொகையிலிருந்தும், இவ்வறிவித்தலின் 16 ம் பந்தி (iii) ம் பிரிவிலுள்ள நிபந்தனைகட்குட்பட்டு நில அளவையாளராக அல்லது ஒளிவரைய நுண்தொழிலராக சேவை செய்யும் முதல் மூன்று வருட காலத்தில் எடுக்கும் சேவைப் புள்ளியிலிருந்தும் தீர்மானிக்கப்படும்.

**20. வேதனமும் பதவி உயர்வுக்குரிய நியந்தனைகளும்.**—(i) (அ) நில அளவையாளர். இரண்டாந்தர நில அளவையாளர்.—வருடம் ரூபா 1,620 இலிருந்து ரூபா 4,620 வரை, 19 தடவை வருடம் ரூபா 120 வீதமும் 4 தடவை வருடம் ரூபா 180 வீதமும், திறமைத்தடை : 2,820 க்கும் ரூபா 3,900 கும் முன்பு.

முதல்தர நில அளவையாளர்.—வருடம் ரூபா 3,300 இலிருந்து ரூபா 5,340 வரை, 5 தடவை வருடம் ரூபா 120 வீதமும் 8 தடவை வருடம் ரூபா 180 வீதமும். திறமைத்தடை : ரூபா 4,080 க்கு முன்பு.

விசேடதர நில அளவையாளர்.—வருடம் ரூபா 5,580 இலிருந்து ரூபா 6,780 வரை, 5 தடவை வருடம் ரூபா 240 வீதம்.

முதல்தர நில அளவையாளராக பதவி உயர்வு பெறுவதற்கு இரண்டாம் தர நில அளவையாளர் (நில அளவை) பகுதி கனிஷ்ட பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

இரண்டாந்தர நில அளவையாளராக உறுதிப்படுத்தப்பட்ட பின்பு அந் நில அளவையாளர்கள் இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப் படுவார்கள். முதல்தர நில அளவையாளராகப் பதிவு உயர்வு பெறமுன்பு ரூபா 2,820 சபளத்தில் ஒரு வருடத்திற்கு அவர்கள சேவை செய்தல் வேண்டும். இவ்வாறே வருடம் ஒன்றுக்கு ரூபா 4,620 சம்பளத்தை அடையும்வரை விசேடதர நில அளவையாளராக பதவி உயர்வுபெற அவர்கள் அருகதையுள்ளவர்களாகமாட்டார்கள்.

நில அளவைப் பகுதி சிரேஷ்டப் பரீட்சையில் சித்தியெய்தும் நில அளவையாளர்கள் எலலாவிதத்திலும் தகுதிடையவர்களாகக் காணப்பட்டால் விசேடதர நில அளவையாளர்களாகவும் அல்லது உதவி அத்தியட்சர்களாகவும் பதவி உயர்வு பெற அருகதையுள்ளவர்களாவார்கள்.

**(அ) ஒளிவரைய நுண்தொழிலர்.**

இரண்டாந்தரம்—வருடம் ரூ. 1,620—19 இன் 120—4 இன் 180—ரூ. 4,620 (வினைத்திறமைத்தடை ரூ. 2,820 க்கும் ரூ. 3,900 க்கும் முன்பு)
முதலாந்தரம்—வருடம்—ரூ. 3,300—5 இன் 180—8 இன் 180—ரூ. 5,340 (வினைத்திறமைத்தடை ரூ. 4,080 க்கு முன்பு).

விசேடதரம்—வருடம் ரூ. 5,580—240—ரூ. 6,780.

பிரதம ஒளிவரைய நுண்தொழிலர்—வருடம் ரூ. 5,160—9 இன் 360—480—ரூ. 8,880.

முதலாந்தரத்திற்குப் பதவி உயர்வு, ஒவ்வொரு உத்தியோகத்தரும் ஒரு வருடம் ரூ. 2,820 சம்பளத்தில் சேவை செய்வதுடன், நில அளவைபபகுதியின் இரண்டாவது பரீட்சையில சித்தியெய்துவதில் தங்கியிருக்கிறது. இரண்டாந்தரத்தில் 4 வருட சேவை செயத ஒவ்வொரு உத்தியோகத்தரும் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவராவார்கள்.

விசேடதரத்திற்குப்பதவி உயர்வு, சம்பளத்திட்டத்தில் ரூ. 4,620 சமபளத்தை அடைந்த 1 ந் தர உத்தியோகத்தர்களிலிருந்து தெரிவு செயயபபடும்.

பிரதம ஒளிவரைய நுண் தொழிலரின் நியமனம், ஒளிவரைய நுண் தொழிலர் (விசேடதரத்தி)லிருந்து விசேட சிறப்புத்திறமையைக் கொண்டு பதவியேற்றமாகச் செய்யப்படும்.

(ii) இப்பலதரப்பட்ட தரங்களுக்குப் பதவி உயர்வு வெற்றிடங்கள் உண்டாகும் பொழுதே கொடுக்கப்படும்.

(iii) உத்தியோகத்தர்கள் தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடமையை நிறைவேற்றுவதில் நில அளவையாளர் அதிபதியைத் திருப்திப் படுத்தினல் தான் அவர்களின் வேதன உயர்வு கொடுக்கப்படும்.

**(ஆ) புவிப்பாற்று விஞ்ஞான நிறுவகம்.**

21. நில அளவையும் மட்டம் பார்ப்பதும் தொழிலாகக் கொள்ள விரும்பும், தேர்ந்தெடுக்கப்பட்ட தனிப்பட்ட மாணுக்கர்களுக்கு இந்நிறுவகம், பிரதானமாக தியத்தலாவையில், நில அளவையிலும் அளவை விதிகளிலும் இரண்டு வருட முழுநேரப் பயிற்சியளிக்கும்.

22. **தகுதி**.—பரீட்சார்த்திகள் இலங்கையர்களாக இருத்தல் வேண்டும்.

அ-து.—பரம்பரையால் அல்லது பதிவால் இலங்கைப் பிரஜையாயிருத்தல்.

அவர்கள் பரீட்சையின் முதற்தினத்தன்று 19 வயதுக்குட்படாமலும் 25 வயதுக்குமேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அவர்கள் குறைந்த பட்சம், இலங்கை சிரேஷ்ட தராதரப்பத்திரத்தை கணிதசாஸ்திரத்துடன் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இலங்கை கல்விப் பொதுத்தராதரப்பத்திரப் பரீட்சையில் (சாதாரண நிலை) கணித சாஸ்திரம், சிங்களம் அல்லது தமிழ்ப்பாஷை ஆகியவற்றுடன் வேறு நான்கு பாடங்களில் இரண்டு தருணங்களுக்கு மேற்படாத பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அவர்கள் கணிதசாஸ்திரம், பிரயோக கணிதம், உயர்கணிதம், பௌதிக வியல் ஆகிய பாடங்களில் விசேஷ சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.—சிங்கள மொழியில கல்விகற்ற ஒரு சிங்களப் பரீட்சார்த்தியின் விடயத்தில், அப்பரீட்சார்த்தி சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர அல்லது அதையொத்த பரீட்சையில் சிங்கள பாஷையில் அல்லது அதையொத்த பாடத்தில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

23. **தகுதிக்குரிய சாசனங்களும் சலுகைகளும்**.—பரீட்சார்த்திகள் 3 ம் பந்தியில் குறிப்பிட்டதுபோல சாசனங்கள் அனுப்புதல் வேண்டும். பரீட்சார்த்திகளுக்கு 4 ம் பந்தி (உ) விலிருந்து (எ) வரைக்குமுள்ள சலுகைகள் மட்டுமே வழங்கப்படும்.

24. **விண்ணப்பங்கள்**.—5 விருந்து 8 ம் பந்திகளுக்கமையவே அனுப்புதல் வேண்டும். 9 ம் பந்தியின்படி அடையாளச்சீட்டும் சமர்ப்பிக்க வேண்டும்.

25. **பொய்யான விபரங்கள் தருவோருக்குரிய அபராதம்**.

(i) மேலே 10 (i) ம் பந்தியில குறிப்பிட்டது போல.

(ii) மேலே 10 (iii) ம் பந்தியில குறிப்பிட்டது போல.

(iii) பரீட்சார்த்தியால் கொடுக்கப்பட்ட விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்கு உட்பட பொய்யானவையென்று காணப் பட்டால் அல்லது தேவையான உண்மைகளை மறைக்கும் நோக் கத்துடன் அவர் கொடாது விட்டால் அல்லது பின்பு எக் காலத்திலேனும் அவர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியற்றவர் என்று நிரூபிக்கப்பட்டால் அப்பரீட்சார்த்திக்கு பயிற்சி வெற்றிகர மாக முடிந்த பின்பு வழங்கப்படும் தகுதித்தேர்வுப்பத்திரம் மீளப்பெறப்படும்.

26. பரீட்சைக்குரிய பாடங்களும் தேர்வு முறையும் 14 ம், 15 ம் பந்திகளுக்கமைய நடைபெறும்.

27. **நிறுவகத்திற்குப் பிரவேசிப்பதற்கான நிபந்தனைகள் :—**

(i) பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பயிற்சிக் காலத்தில் தனது பராமுகத்தால் அல்லது கவலை யீனத்தால் இழந்த அல்லது பழுதாக்கிய சம்பத்துக்களினதும் அல்லது உபகரணங்களினதும் பெறுமதியை அரசாங்கத்திற்கு கொடுப்பதற்கு, ரூ. 1,500 பெறுமதியுள்ள சொத்துள்ள ஒரு அங்கீகரிக்கப்பட்ட பிணையாளியைக் கொண்டு ஒரு உடன்படிக்கையும் ஒப்பந்தமும் செய்து கொள்ள வேண்டும்.

(ii) பயிற்சிக்குக் கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது. ஆனால் ஒவ்வொரு பயிற்சியாளரும், எழுதுவதற்கும், வரைவதற்கும் தேவையான உபகரணங்கள் வைத்திருக்கும்படி வேண்டப்படுவர்.

(iii) பயிற்சியாளர்கள் தியத்தலாவை பாடி வீடுகளிலிருக்கும் போது, தளபாடமற்ற பிரமச்சரிய விடுதிகள் (பொதுச்சமையலறை களுடன் சயன மண்டபங்கள்) அளிக்கப்படும், அதற்குரிய வாடகை கொடுக்கப்படவேண்டும். மின்சாரச் செலவுகள் வேறு.

(iv) பயிற்சியாளர்கள் உணவுக்கான ஒழுங்குகளைத் தாங்களே செய்தல் வேண்டும். ஒவ்வொரு பயிற்சியாளரும், பாடிவீட்டிலுள்ள பாதுகாவலரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சொந்த ஊழியனை வைத்திருக்க அனுமதிக்கப்படுவர். வேண்டப்படின் அச் சொந்த ஊழியன் நற்சாட்சிப்பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். பாதுகாவலர், தனது அங்கீகாரத்தை மீளப்பெற்றால் பயிற்சி யாளர்கள், சொந்த ஊழியர்களை வெளியேற்ற உடன் பட வேண்டும்.

(v) பயிற்சியாளர்களும் அவர்களது சொந்த ஊழியர்களும் பாடி வீட்டுப் பாதுகாவலரின் ஒழுங்காற்றுக் கட்டுப்பாடுகளுக்கு உட் படுவர். பயிற்சியாளர்கள் பாடிவீட்டுக் கட்டுப்பாடுகளுக்கு அமை வதற்கு உடன்படவேண்டும்.

28. **நிறுவகத்தின் தகுதித்தேர்வுப்பத்திரம்**.—பயிற்சியை வெற்றி கரமாக முடிக்கும் பயிற்சியாளர்களுக்கு புவிப்பௌதிக விஞ்ஞான நிறுவ கத்தின் தகுதித் தேர்வுப்பத்திரம் வழங்கப்படும். தகுதித்தேர்வுப்பத்திரம் எந்தத் தொழிலுக்காவது உத்தரவாதமாகக் கருதப்படமாட்டாது. ஆயினும் அது நில அளவையிலும் மட்டம் பார்ப்பதிலும் நில அளவையாளர் அதிபதியால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு சலுகை கள் சம்பாதிக்கும்.

29. வேண்டிய தராதரங்கள் இல்லாத விண்ணப்பகாரர்களின கடிதங் களுக்குப் பதில் கொடுக்கப்படமாட்டாது.

30. எழுத்துப்பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள், பரீட்சை அதி காரியால் ஆக்கப்பட்ட "பரீட்சார்த்திகளுக்குரிய பிரமாணங்களுக்குக்" கட்டுப்பட்டுள்ளவர்களாவார்கள்.

ஜே. சீ. சண்முகம்,
நில அளவையாளர் அதிபதி.

நில அளவையாளர் அதிபதியின் காரியாலயம்,
கீனீ "சி", த. பெ. எண் 506, கொழும்பு 5,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந உ.

**குறிப்பு**.—இப்பரீட்சையொட்டிய எக்கடிதத்தையும் நில அளவையாளர் தலைமை அதிபதிக்கு தனிப்பட்ட முறையில் விலாசமிட்டு அனுப்பக் கூடாது.

8-703—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை அரச விமானப் படை

1965-66 நிதி ஆண்டிற்கு இலங்கை அரச விமானப் படை நிலையங்களுக்கு கீழ்க்காணும் சேவை செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் மெழுகிட்ட கேள்விகளைக் கொழும்பு சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள இலங்கை அரச விமானப்படையின் தலைவர் 1965, செப்ரெம்பர் மாதம் 9 ந் திகதி முற்பகல் 10 மணிவரை ஒப்புக்கொள்வார்.

| சேவை/விநியோகஞ் செய்யும் வகைகள் | நிலையங்கள் | | | |
|---|---|---|---|---|
| | கொழும்பு | கட்டுநாயகக | தியத்தலாவை | சீனன்வாடி |
| (அ) உத்தியோக உடைகள் பரக் துணிகள் கழுவுதல் | ஆம் | இல்லை | ஆம் | இல்லை |
| (ஆ) மெத்தைகள், இருக்கைகள தலையணைகள் புதுக்கி அமைத்தல் | இல்லை | ஆம் | ஆம் | ஆம் |
| (இ) பாதணிகள் திருத்தியமைத்தல் | இல்லை | இல்லை | ஆம் | ஆம் |
| (ஈ) உத்தியோக உடைகள பெடிங் முதலிய புதுக்கி மாற்றியமைத்தல் | இல்லை | இல்லை | ஆம் | ஆம் |
| (உ) மருத்துவமனை அழுக்குப் படிந்த துணிகள் கழுவுதல் | இல்லை | ஆம் | இல்லை | இல்லை |
| (ஊ) கட்டிட உபகரணங்கள் விநியோகித்தல் | இலலை | ஆம் | இல்லை | ஆம் |

2. விமானபபடைத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட படிவங்களில் கேள்விகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 75 நது தனித்தனி ஒவ்வொரு கேள்விக்கும், ஒவ்வொரு சேவைகரும்/விநியோகத்திற்கும் கொழும்பு சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையி லுள்ள விமானப்படைத் தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன அதிகாரியாகவும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கட்டிய பினனரே கேள்விப் படிவங்கள் கொடுக்கப்படும். கேள்விப்படிவங்கள் 1965, செப்ரெம்பர் மாதம் 8 ந் திகதி நண்பகல் 12 மணிவரை கொடுக்கப்படும்.

3. கேள்விப் பத்திரஙகள் இரு பிரதிகளாக உறையிட்டு மெழுகிட்டு அவ்வுறையின் இடதுபுற மேல் மூலையில் "இலஙகை அரச விமானப் படைக்கு சேவை/விநியோகஞ் செய்வதற்கு 9.9.65 வரை ஏற்றுகொள்ளும் கேள்வி" எனக் குறிப்பிட்டு விமானபபடைத் தலைவர், இலஙகை அரச விமானப்படை, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு என முகவரியிட்டு அனுபபப்பட வேண்டும்.

4. முதலாம் பந்தியிற குறிப்பிடப்பட்ட திகதி, நேரம், இடத்தில் கேள்விகள் பரிசீலனை செய்யப்படும். அவ்வேளையில் கேள்விக்காரர்கள் அல்லது அவர்களின அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

5. கொழும்பு சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள விமானப் படைத் தலைமை நிலையத்தில் மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

ஈ. ஆர். அமரசேகரா,
எயர் கொமடோர்,
விமானப் படைத் தலைவர்

8-614—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

## கொழும்புத் துறைமுக அதிகாரசபை

### தேநீர்ச்சாலை—டெல்வற் பகுதி

மேற்படி தெனீர்ச்சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப் பட்ட கேள்விகள் 1965 ம் ஆண்டு செப்டம்பர் 3 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை துறைமுக அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்குத்தகை, துறைமுக அதிகாரியினால் நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்காகும்.

2. கொழும்புத் துறைமுக அதிகாரசபையில் ரூபா 25/- கட்டுப் பணமாகக் கட்டிப் பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இதனப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு செப்டம்பர் 1 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லாக் கடமை நாட்களிலும் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக் கொடுக்கப்படும்.

8-719—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,436

---

## நீர்ப்பாசன இலாகா

### குருணகல் உபபகுதி

வடமேல் பகுதி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் குருணகல் நீர்ப்பாசனக் காரியாலத்திற்கு 1.10.65 முதல் 30.9.66 வரை அரசாங்க பண்டங்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு ரூபா 10,000 அதற்கு கூடிய தொகைக்கும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் குருணகல் நீர்ப்பாசனப் பொறியியலாளரிட மிருந்து 2.9.65 வரை பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகரத்தினம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
உபபிரிவு குருணகல்.

8-566—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,436

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கசலக்க உபபிரிவு

நீர்ப்பாசன இலாகா, கசலக்க உப பிரிவுக்குச் சேர்ந்த பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் கண்டியிலுள்ள மத்திய பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1965 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 15 ந் திகதி புதன்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின் உடனே திறக்கப்படும்.

(1) 1965/1966 ம் வருடத்தில் சாமான்கள் கொண்டு வருதல்.

(2) 1965/1966 ம் வருடத்தில் பின்னிய தென்னை ஓலைகள் கொடுத்தல்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூ. 15,000/- தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களும் லொறியால் சாமான்கள் இழுக்கக் கூடாத றேட்டில் ரேயிலற் றக்றர் போட்டு சாமான்கள் கொண்டு போகக்கூடியவர்களும் மட்டும் இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

இக் கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் பள்ளேவத்தையிலுள்ள கசலக்க உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமும், மினிப்பே, கண்டி, மாத்தளை, நுவரேலியாவிலும் அலுவலகத்தில் அலுவல் நேரங்களில் 1965 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 20 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1965 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 13 ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும், அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப் படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ஒவ்வொரு வேலைகும் ரூ. 25/- தொகையைக் கேள்விக்கட்டணமாக செலுத்தப்பட வேண்டும்.

இக் கேள்விக் கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

இக் கேள்விகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. ஏ. ஜே. ஜயசூரிய,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கசலக்க உப பிரிவு.

கசலக்க, பள்ளேவத்தை,
1965 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 5 ம் திகதி.

8-637—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,436

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கந்தளாய் நீர்ப்பாசனத் திட்டம்

திருகோணமலைப் பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் (விலாசம் ஓர்ஸ் ஹில், திருகோணமலை) 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி வரையும் கீழ்க்காணும் வேலைகட்குக் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன்பின் உடனடியாகத் திறக்கப்படும் :—

| வேலையின் விபரம் | பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய தொகை | கட்டுமான பணத்தொகை |
|---|---|---|
| கல்லுப் பதித்தல், கல் பரவுதல், அதன் மேல் தார் இடுதல்—தம்பலகாமம் இன்னியாத்தெரு : | | |
| | ரூபா | ரூபா |
| (அ) 4 ம் மைல் .. | 38,000 | 50 |
| (ஆ) 5 ம் மைல் .. | 38,000 | 50 |
| (இ) 6 ம் மைல் .. | 38,000 | 50 |
| (ஈ) 7 ம் மைல் .. | 38,000 | 50 |
| (உ) 8 ம் மைல் .. | 38,000 | 50 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்குறிக்கப்பட்ட தொகைக்கோ அல்லது கூடவோ பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே மேற்படி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கத் தகுதி உடையவராவர்.

3. இக்கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் கந்தளாய், திருகோணமலை, அல்லை ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசன உப பகுதி உத்தியோகத்தர்கள் அலுவலகங்களிலிருந்து அலுவலக நேரங்களில் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9 ம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். வெற்றுப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் மேற்கூறப்பட்டபடி கேள்விக்கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். இக்கேள்விப்பணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக்காட்டினாலும் போதுமானது. கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாங்கள் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் தாங்கள் இக்கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்பதை நீர்ப்பாசனப் பொறியியலாளர் உறுதிப்படுத்துவதற்காக அவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. இக்கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் கந்தளாய் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. சிவசுப்பிரமணியம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கந்தளாய் நீர்ப்பாசனத் திட்டம்.

கந்தளாய்,
1965 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 12 ந் உ.

8-697—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,436

## நீர்ப்பாசனத்திணைக்களம்

### மகாகனத்தராவ உபபிரிவு

மகாகனத்தராவ உப பிரிவில் கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் அனுராதபுரத்திலுள்ள வட மத்திய பிரிவு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1965 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 7 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிவரைக்கும் ஏற்றுற்றுக் கொள்ளப்படும், அதன்பின் உடனே திறக்கப்படும்.

(1) குருளுவேவாகுளத்துப் பிரதான ரேட்டிற்கும் குளக்கட்டு ரேட்டிற்கும் கல் போட்டுத்தார் ஊற்றுதல்.

(2) பகலகன் கின்டிகமகுளத்துப் புனருத்தாரணவேலைகள்.

2. நீர்ப்பாசனத்திணைக்களத்தில் 35,000/- ரூபாவிற்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத்தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விகளுக்கான வெற்றுப்பத்திரங்களைமகானத்தராவ, அனுராதபுரம், பதவியா ஆகிய நீர்ப்பாசனக்காரிலாயங்களில் 3.9.65 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிவரை கேள்விக்கட்டணமாக ரூபா. 50/- செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியிற் செலுத்திப் பற்றுச் சீட்டுக்காட்டினாலும் போதுமானது. கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்கவேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விபபத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும்.

4. இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் மகாகனத்தராவ உப பிரிவு நீர் பாசனப்பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மகாகனத்தராவ உப பிரிவு.

மிகிந்தலை,
1965 ம் ஆண்டு ஒகஸ்ட மீ 12 ந வ.

8-710—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486.

---

## கடற்றொழிற் பகுதி

### தேங்காய் பிடுங்கும் உரிமைக்காய கேள்விகள்

நீர்கொழும்பு, பிட்டிப்பனைக் கடற்றொழில் நிலைய வளவிற்குள் தேங்காய்பிடுங்கும் உரிமைக்காய கேள்விகள், காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி வைப்புப் பணம் ரூபா 25.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு 3,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 13 ந வ.

சாம் எச். சில்வா,
கடற்றொழில் அதிபர்.

8-612—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல.14,486.

---

## கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### அறிவித்தல்

### நியூஸ்பிரின்ட் கடதாசிக்கான கூறுவிலை

1000 தொன் வெள்ளை நியூஸ்பிரின்ட் தாள்களை விநியோகம் செய்வதற்கு, வெளிநாடுகளிலுள்ள பிரதான வியாபாரிகளிடமிருந்து நேரடியாக கேள்விகள் (கொள்விலை, காப்புறுதி, கேள்விச்செலவு உட்பட) கோரப்படுகின்றது. ஒரு றீமில் 500 தாள்கள் கொண்டதாகவும், 22½" × 35" அளவும், 50-52 கிறும்ஸ்/சதுர மீற்றர் எடையும் கொண்டதாக இருக்க வேண்டும். 250 தொன்களாக செப்டம்பர் தொடங்கி கப்பலிலேற்ற வேண்டும். இதற்குரிய பணம் நாணயக் கடிதமூலம் செலுத்தப்படும்.

எழுத்து மூலமான இவ்விபரங்களை உறையிலிட்டு மெழுகிட்டு, அவ்வுறையின் மேற்புற இடது மூலையில் " நியூஸ்பிரின்ட் விநியோகம் செய்வதற்கான கேள்விகள் " எனக் குறிப்பிட்டு தலைவர், கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம், 70, யோர்க் வீதி, கொழும்பு 1, இலங்கை என்ற விலாசத்திற்கு 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

தந்தி மூலம் வரும் கோரிக்கைகள் " ஈ.பீ.எம். கோர்ப் " கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

கேள்விகள் மூடப்படும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ உங்களின் விண்ணப்பத்துக்கான " மாதிரிக் கடதாசி " களையும் அனுப்ப வேண்டும்.

தலைவர்,
கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

70, யோர்க் வீதி,
கொழும்பு 1.

8—735—20.8.65 திகதிய வர்த்தமானி இல. 14,486

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## வர்த்தமானி விளம்பரம்—காட்டுத்திணைக்களம்

### ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் அரசினர் மரக்காலையிலிருக்கும் 25 கூறுகள் கொண்ட 200 பாலை மரங்கள் (1875.5 கன அடி) யாழ்ப்பாண வட பெரும்பாக வனபரிபாலன அதிகாரியால் 31.8.65 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கேட்க விரும்புவோர் ஏல விற்பனைக்கு முன்னதாகவே மரங்களை பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

ஏலவிற்பனை பற்றிய மூழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது யாழ்ப்பாண அரசினர் மரக்காலையிலோ பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. டி. ஆர். இரத்தினராசா,
வட பெரும்பாக வனபரிபாலன அதிகாரி,
யாழ்ப்பாணம்.

காட்டுத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 11 ந வ.

8-626—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486.

## காட்டுத் திணைக்களம்

### ஏல விற்பனை

புல்லுமலை சேரங்கடை காவலெல்லை வன அதிகாரி வீட்டுக்கருகாமையில் இருக்கும் 304.9 கன அடி கொண்ட 24 சவண்டலை மரங்கள் மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலன அதிகாரியால் 31.8.65 காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கேட்க விரும்புவோர் ஏல விற்பனைக்கு முன்பதாகவே மரங்களைப் பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

ஏல விற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது புல்லுமலை காட்டுக்கந்தோரிலோ பெற்றுக் கொள்ளலாம்.

க. அருள்செல்வம்,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி,
மட்டக்களப்பு.

மாவட்ட வன பரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 5 ந உ.

8-627—20.8.65 ந திகதிய வர்த்தமானி இல. 14,486

# நானாவித அறிவித்தல்கள்

## பொதுவேலைத் திணைக்களம்

### 1967 கனடா, மொன்றில் சர்வதேச பொருட்காட்சியில் இலங்கைத் தேசிய படமாடத்திற்கு வேண்டிய சிற்ப அடைசுபலகை அமைப்புத் தெரிவுப் போட்டி

வீர சிலா வடிவங்கள் சித்தரிக்கப்பெற்ற அடைசு பலகையின் அமைப்புக்காய விண்ணப்பங்கள் 20.10.65 வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வடைசுபலகை இலங்கைத் தேசிய படமாடத்தின் மேற்றிசை மதிலின் முகவாயிலை அலங்கரிப்பதாய், 15 அடி உயரமும் 55 அடி நீளமும் கொண்டிருக்கும். அமைப்பு கண்டி ஊர்வலக் காட்சியைத் திறம்பட, தத்ருபமாக, ஒருங்கே விஸ்தரிப்பதாக இருத்தல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் உள்ள அமைப்பு உயர்ந்த தரமுடையதாயும் வளம்மிக்க படைப்பாகவும் அமைந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தெரிந்தெடுக்கப்படும் அமைப்பு இந்நாட்டின் சிற்பத் திறனை எடுத்தோதுவதாயும், மேற்கொண்ட பொருளை தகுந்த அளவில் வர்ணிப்பதாயும் அமையும் என நம்பப்படுகிறது.

கீழ்வரும் பரிசில்கள் வழங்கப்படும்

| | | ரூபா |
|---|---|---|
| முதற் பரிசு | .. | .. 5,000/- |
| இரண்டாவது பரிசு | .. | .. 2,000/- |
| மூன்றாவது பரிசு | .. | .. 1,000/- |

வேண்டிய வேறு விபரங்களுக்கு பின்வரும் முகவரிக்கு உடனே எழுதவும் :—

தலைமைச் சிற்பி வல்லுனர்,
பொதுவேலை திணைக்களம்,
கொழும்பு 1.

1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந உ.

8-670—20.8.65 ந திகதிய வர்த்தமானி இல. 14,486

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.